Daily Thanthi Puducherry 1-10-2023

# ஜிப்மரில் சமையல் போட்டி

புதுச்சேரி, அக்.1-

புதுவை ஜிப்மர் ஆஸ்பத்திரியில் உணவுத்துறை சார்பில், தொடர் ஊட்டச்சத்து கல்வி கருத்தரங்கு நடந்தது. மேலும் கல்லூரி மாணவர்களுக்கான சமையல், விழிப்புணர்வு போஸ்டர் போட்டியும் நடந்தது. இதில் ஜிப்மர், பாரதிதாசன் மகளிர் கல்லூரி, இந்திராகாந்தி மருத்துவக்கல்லூரி, அன்னை தெரசா செவிலியர் கல்லூரி, மகாத்மாகாந்தி மருத்துவ கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

உணவியல் வல்லுனர்களான சுஜாதா, விஜயலட்சுமி, உமா சங்கரி, வினிதா குமரன் ஆகியோர் சிறந்த உணவு மற்றும் விழிப்புணர்வு போஸ்டர்களை தேர்வு செய்தனர். அவற்றுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.